ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2308/50 - 2022 දෙසැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2022.12.02
*2308/50 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

***1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (நியமத் துணைவிதிகள்) சட்டம்***

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் கீழ்க்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

***தியாகராஜா நிரோஷ்,***
*தவிசாளர்,*
*வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.*

*வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,*
*புத்தூர்,*
*2022, நவெம்பர் 17.*

***03 ஆம் இலக்க 2022.11.17 ஆந் திகதிய தீர்மானம்***

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது விதியின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2018.05.09 ஆந் திகதிய 2070/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2018.09.11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2018.10.08 ஆந் திகதிய 2092/6 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் 4(அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 07 தொடக்கம் 09 வரையான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்கான துணைவிதிகளினை ஏற்றுக்கொள்வதென்றும், 2023.01.01 ஆந் திகதியிலிருந்து வலிகாமம் கிழக்கு பிரதேசத்தில் அதனை நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

EOG *12-0051*

1A - PG 6073 — 07 (2022/12)
இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*